THE COURT OF THE SUBORDINATE JUDGE, METTUR

MCOP.No.114/2012 C/W 108/2012

Deposition of PW4 witness of Plaintiff/Petitioner/Defendant/Respondent solemnly affirmed by Bench Clerk in OS Section of this court in accordance with the provisions of Oaths Act 1969 (Act 44 of 1969) on 29.09.2023.

Evidence Recorded Time: 12.01 P.M to 12.45 P.M

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **Name** | : | மகேஷ்குமார் | **Caste** | : | |
| **S/o & W/o.** | : | கவுண்டப்பன் | **Calling** | : | |
| **Village** | : | | **Religion** | : | |
| **Taluk** | : | | **Age** | : | |

**முதல் விசாரணை:-**

நான் இதில் மனுதாரர் தரப்பு சாட்சி.4 ஆவேன். நான் மேல் கண்ட விலாசத்தில் குடியிருந்து வருகிறேன். எனது சத்திய பிராமாண வாக்கு மூலம் தாக்கல். அதில் கண்ட சங்கதிகளை படிக்க கேட்டு அவைகள் உண்மை என தெரிந்து கையெழுத்து செய்தேன். மேற்படி வாக்குமூலத்தில் உள்ள சங்கதிகள் உண்மைதான். எனவே எனது சாட்சியத்தை ஏற்றுக்கொண்டு மனுப்படி உத்தரவாக வேண்டுகிறேன்.

**2-ம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை:-**

விபத்து சமயத்தில் விபத்து சம்மந்தமாக நான் போலீஸிலில் புகார் கொடுத்தேனா என்றால் இல்லை, கையெழுத்து போடச் சொன்னார்கள், என்ன எழுதியிருந்தார்கள் என்று தெரியாது. விபத்து சம்மந்தமாக நான் மேச்சேரி காவல் நிலையத்திற்கு சென்றிருந்தேனா என்றால் சென்றிருந்தேன், போலீசார் காவல் நிலையத்திற்கு வரச் சொன்னார்கள், சென்றேன், விபத்து நடந்த தேதி தெரியாது, 12 ஆண்டுகளுக்கு முன்பு விபத்து நடைபெற்றது. விபத்து நடந்த எத்தனை நாட்கள் கழித்து காவல் நிலையம் சென்றோம் என்றால் 20 நாட்கள் கழித்து விசாரணைக்கு வரவேண்டும் என்று அழைத்ததால் சென்றோம். விபத்து நடந்த அடுத்த நாள் விடியகாலை 5 மணிக்கு நான் காவல் நிலையம் சென்று புகார் கொடுத்ததாக சொல்லியிருப்பது தவறு என்றால் சரிதான். 15.09.2011-ம் தேதி மேச்சேரி காவல் நிலையத்தில் எனது புகாரின் அடிப்படையில் முதல் தகவல் அறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது தவறு என்றால்

சரிதான். இந்த வழக்கில் தாக்கல் செய்யப்பட்டுள்ள முதல் தகவல் அறிக்கை ஏற்றுக்கொள்ளக்கூடியது அல்ல என்றால் சரிதான். என்னுடைய முதல் விசாரணையில் 11.10.2011–ம் தேதி என்னை போலீசார் விசாரித்து மறு வாக்குமூலம் கொடுத்தேன் என்றால் சரிதான், அந்த ஆவணத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் செய்துள்ளேன். குற்ற வழக்கு என்ன ஆனது என்ற விவரம் தெரியுமா என்றால் தெரியாது. குற்றபத்திரிக்கை யார் பெயரில் போட்டார்கள் என்று தெரியுமா என்றால் தெரியாது. குற்ற வழக்கு எண் தெரியாது. இறந்துபோனவர்கள் யார் யார் என்றால் ஒருவர் பெயர் பழனியப்பன், மற்றொருவர் பெயர் தெரியாது, பிரமாண பத்திரத்தில் 3ம் பக்கத்தில் இருவருரின் பெயரையும் குறிப்பிட்டுள்ளேன். பிரமாண பத்திரத்தில் இருவரின் பெயரை குறிப்பிட்டுள்ளேன் என்றால் தெரியாது. பிரமாண பத்திரத்தில் என்ன சொல்லியுள்ளேன் என்று தெரியாது. எம்.80 பஜாஜ் வண்டியை சுரேஸ் ஓட்டிச் சென்றார், நான் பின்னால் அமர்ந்து சென்றேன், வண்டி எண் தெரியாது. நான் பயணம் செய்த வாகனத்தின் பதிவு எண் TN 31 M 5597 என்று என்னுடைய பிரமாண பத்திரத்தில் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். ஆனால் விபத்தில் சம்மந்தப்பட்ட எம்.80 வாகனம் முதல் தகவல் அறிக்கையின் படி TN 31 M 5596 ஆகும். முதல் தகவல் அறிக்கையின்படி குற்றவாளியாக காண்பிக்கப்பட்டவர் TN 39 AH 6093 என்ற ஹீரோ ே◌ஹாண்டா வாகனத்தை ஓட்டிச் சென்ற சின்னப்பையன் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. அந்த இருவரில் ஒருவர் விபத்து நடைபெற்ற இடத்திலேயே இறந்ததாகவும், மற்றொருவர் இரண்டு மாதங்கள் கழித்து இறந்ததாகவும் கேள்விப்பட்டேன். மேற்படி இருவரின் பிரேத விசாரணை அறிக்கைகளில் TN 39 AH 6093 என்ற இருசக்கர வாகனத்தை ஓட்டியவர் நான் பயணம் செய்த TN 31 M 5596 வாகத்தின் மீது மோதி விபத்து ஏற்பட்டதாகவும், நாங்கள் கூறுவது போல TN 52 X 5897 என்ற சரக்கு வாகனம் மோதி அந்த இருவரும் இறந்ததாக குறிப்பிடப்படவில்லை என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. நான் இந்த விபத்து சம்மந்தமாக நான் கொடுத்த முதல் தகவல் அறிக்கையை படித்து பார்த்து கையெழுத்து செய்துவிட்டு தற்போது TN 52 X 5897 என்ற மகேந்திரா வாகனம் விபத்தை ஏற்படுத்தி இருவரும் இறந்துவிட்டதாக முன்னுப்பின் முரணாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. என்னுடைய சாட்சியம் ஏற்றுக்கொள்ளக்கூடியது அல்ல என்றால் சரியல்ல. இறந்தவர்கள் எனக்கு பழக்கமான நபர்கள் என்றால் இல்லை. நீதிமன்றத்தில் இருந்து

சாட்சி சொல்ல அழைப்பாணை வந்தததா என்றால் இல்லை, மனுதாரர்கள் அழைத்தன் பேரில் நான் சாட்சியம் சொல்ல வந்ததேன். இறந்தவர்கள் குடும்பம் எனக்கு தெரிந்தவர்கள் என்பதால் மனுதாரர்களுக்கு உதவி செய்யும் நோக்கத்தோடு முதல் தகவல் அறிக்கையில் கூறியுள்ளபடி நடந்த உண்மை சம்பவத்தை தற்போது மாற்றி பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**<u>4-ம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை</u>** -

மகேந்திரா மினி ஆட்டோதான் இந்த விபத்திற்கு முழு காரணம் என்றால் சரிதான். மகேந்திரா மினி ஆட்டோ ஓட்டுநரின் கவன குறைவால்தான் இந்த விபத்து ஏற்பட்டது என்றால் சரிதான். குற்ற பத்திரிக்கை மேற்படி வாகனத்தின் ஓட்டுநர் மீதுதான் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். இருசக்கர வாகனத்தை ஓட்டிச் சென்ற மனுதாரர் கணவர் மீது எந்த தவறும் இல்லை என்றால் சரிதான்.

**<u>5-ம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை –</u>** இல்லை.

**<u>மறுவிசாரணை –</u> இல்லை.**

ஒம்/-PW4,

இதில் கண்ட சங்கதிகள் என் முன்னிலையில் சாட்சியிடம் படித்துக் காண்பிக்கப்பட்டு அவரால் சரியென ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்னிலையில் கையொப்பம் /கைரேகை செய்தார்.

ஒம்/-S.முத்துராமன்,
சார்பு நீதிபதி, மேட்டூர்.